## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கம்பகா விக்கிரமாரச்சி கல்வி நிறுவனத்தின் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுளுக்கு ஏற்புடையதான குறிப்புகள், சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளைக் கொண்டமைந்த 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகிறது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து நிதிக் கூற்றுகளில் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 1.5 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக் கூற்றுகள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புடைய தரப்புகளதும் பொறுப்புகள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்கவும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 38 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கவும் சரியாகவும் நியாயமாகவும் நிதிக் கூற்றுகளை தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றறை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கல்வி நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஆவதுடன், கல்வி நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கல்வி நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் கல்வி நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கல்வி நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க

ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து நிறுவனத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றன எனவும்,
- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.
- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,
- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையபாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

---------------------------

### 1.5.1 நிதிக் கூற்றுகளை தயாரித்தல் தொடர்பாக உள்ளக கட்டுப்பாடு

-----------------------------------------------------------------------------------------

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை தரநியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

## 1.5.2 பொதுத் துறை கணக்கீட்டு தரநியமங்களுக்கு இணங்கியொழுகாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| உரிய தரநியமங்களுக்கான தொடருடன் இணங்கியொழுகாமை | முகாமைத்துவத்தின அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு தர நியமங்கள் 07 இல் பந்தி 65 பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களின் பயனுள்ள ஆயட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யாமை காரணமாக கிரயம் ரூபா.43,215,814 தொகை பெறுமதியிலான சொத்துக்கள் முற்றுமுழுதாக தேய்மானம் மேற்கொள்ளப்பட்டிருப்பினும், மேலும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி ஏற்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வழு இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு தரநியமம் 03 இன்படி மீள்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | மீள்மதிப்பீடு மேற்கொள்ள வேண்டிய சொத்துக்களை அடையாளம் காணப்பட்டு மீள்மதிப்பீட்டு பெறுமதியை கணக்கில் வைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு தரநியமம்படி நடவடி-க்கை மேற்கொள்-ளுதல் வேண்டும். |
| (ஆ) இலங்கை அரச துரை கணக்கீட்டு தரநியமம் 19 இல் 61 ஆவது பந்தி பிரகாரம் பணிக்கொடை ஒதுக்கீடு கணக்கீடுகையில் ஆயுட்காலம் மதிப்பீட்டு முறை பயன்படுத்தி நம்பிக்கையுள்ள மதிப்பீடு மேற்கொள்ள வேண்டுமாயினும், நிறுவனம் அதன்படி ஊழியர்களின் பணிக்கொடை கணக்கிடப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டில் தரநியமம்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு தரநியமம்படி நடவ-டிக்கை மேற்கொள்-ளுதல் வேண்டும். |

## 1.5.3 கணக்கீட்டு குறைப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| கல்லூரிக்குரிய 243.9 பேர்ச் அளவிலான 03 நிலத் துண்டுகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிடப்படாமையால் நிறுவனத்திற்குரிய காணிகளின் செவ்வையான பெறுமதி நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்படவில்லை. | சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கை கணக்கு வைக்கும் தேவைகளுக்கு பொருத்தமான வகையில் மேற்கொள்ளப்படாமையால் மீண்டும் மதிப்பீடு செய்வதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | பெறுமதி கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |

1.6 **சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மனாங்ள் என்பவற்றுக்கு இணங்கியொழுகாமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர்** | **இணங்கியொழுகாமை** | **முகாமைத்துவத்தின் அபிப்பிராயம்** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| 1995 மார்ச் 13 ஆந் திகதிய 862/8 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் வெளியிடப்பட்ட கம்பகா விக்கரமாரச்சி ஆயர்வேத கல்வி நிறுவனத்தின் நடவடிக்கை குறிப்பு பந்தி 5 . | மீளாய்விற்கான ஆண்டில் பணிப்பாளர் சபையின் கூட்டங்கள் பொருட்டு உத்தியோகபூர்வமாக நியமனம் பெறுகின்ற பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் அதிபதி மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நியமனம் செய்த பிரதிநிதியாளர் பங்குகொள்ளாதிருக்கையில், நடவடிக்கை குறிப்பு பந்தி 05 பிரகாரம் ஏனைய உறுப்பினர் ஒருவரை நியமனம் செய்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் அவர்களை அறிவுறுத்தப்பட்டுள்ளது. | நடவடிக்கை குறிப்பு பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவு

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைவு ரூபா.7,898,494 தொகை பற்றாக்குறை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா.1,170,342 ஆகும். அதன்படி நிதிசார் விளைவில் ரூபா.6,728,152 தொகை வீழ்ச்சியடைதல் அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சியடைதலுக்கு உடன்படிக்கை சேவை செலவு ரூபா.4,700,809 மற்றும் சுய நிதிசார் நிகழ்ச்சித்திட்டங்களின் பொருட்டு செலவிடப்பட்ட தொகை ரூபா.2,008,713 என்பன அதிகரித்தல் பிரதான காரணமாகியுள்ளது.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமைக் கூற்றில் நடைமுறை பொறுப்புகளின்கீழ் மீள செலுத்தப்பட வேண்டிய நிறுத்தி வைத்தல் மற்றும் பல்வேறு பிணை வைப்புகளில் பெறுமதி ரூபா.15,093,438 தொகையானதுடன், அதில் ரூபா.812,269 தொகையிலான மீதி 03 ஆண்டுகள் தொடக்கம் 05 ஆண்டுகள் வரை பழைமையான மீதியாக காணப்பட்டது. | வைப்புகளை விடு-விப்பதற்கு அல்லது வருமானத்தில் சேர்ப்-பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் | காலம்கடந்த வைப்புகளை சீராக்குவதற்கு அல்லது வருமானத்தில் எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) கல்லூரியில் நிலையான சொத்துக்களை அட்டவணைப்படுத்துவதற்கு 2010 ஆம் ஆண்டில் ரூபா.824,000 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்திருந்த கணினி மென்பொருள் முறைமையில், சொத்துக்களை கொள்வனவு செய்தல் தொடர்பான தகவல்களை மட்டும் உள்ளடக்கப்பட்டிருந்தது. | கணினி மென்பொருள் தொழில்நுட்ப ரீதியாக பலவீனமான நிலையில் உள்ளபடியால் இற்றைப்படுத்தி பேணிச் செல்லப்படுகிறது. | சொத்துக்களுக்கு ஏற்புடையதான எல்லா கொடுக்கல்வாங்கல் களையும் கணினி மென்பொருளில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |
| (இ) விரிவுரையாளர் ஒருவரின் போதனைகளுக்கு பங்குபற்றுதல் தொடர்பாக மாணவர்கள் நிராகரித்தல் காரணமாக, 2017 ஆம் ஆண்டில் ஆகஸ்ட் தொடக்கம் கணக்காய்வுக்கு உட்பட்ட 2019 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 28 ஆந் திகதி வரை சம்பந்தப்பட்ட விரிவுரையாளர் போதனைகள், பரீட்சை கடமைகள் மற்றும் கல்விசார் சபை கூட்டங்களில் பங்குபற்றாவிடினும், அந்தக் காலப்பகுதி பொருட்டு எல்லா படிகளுடன் சம்பளமாக ரூபா.3,336,200 செலுத்தப்பட்டிருந்தது. அந்த விரிவுரையாளரின் போதனைகளை மேற்கொண்டு நடாத்துவதற்காக 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆந் திகதி தொடக்கம் வெளியக விரிவுரையாளர்களின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டு போதனைக் கட்டணங்களாக ரூபா.148,500 தொகை செலவிடப்பட்டிருந்தது. | முகாமைத்துவ சபையில் கலந்துரையாடப்பட்டதுடன், பிரச்சினை தீர்க்கப்படும் வரை தற்காலிக விரிவுரையாளர்களின் ஒத்துழைப்புடன் வெற்றிட-ங்களை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. விரிவுரையாளர் போதனைகளின் பொருட்டு பங்குபற்றவில்லை எனிலும், பாடவிதானங்களின் திருத்த நடவடிக்கைகளில் மற்றும் கல்விப் பிரிவின் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார். | விரிவுரையாளரை போதனைகளில் பங்குபற்றச் செய்வித்தல் வேண்டும். |

## 3.2 தொழில்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 ஆம் ஆண்டு செப்தெம்பர் 12 ஆந் திகதி செப்தெம்பர் 12 ஆந் திகதி விடுவிக்கப்பட்ட கொடுப்பனவில் கல்லூரியிடம் கையளிக்கப்பட்டிருந்த ஹெக்டயார் 2.3533 நில அளவினைக் கொண்டு வத்துபிட்டிவலயில் அமைந்திருந்த மூலிகை பூங்கா கற்கையாளர்களின் கல்வி நடவடிக்கைகள் பொருட்டு உபயோகப்படும் வகையில் உரிய திட்டத்தின்கீழ் அபிவிருத்தி செய்வதற்கு மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டுகளில் இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | சொத்துக்களை வினைத்திறனாக உபயோகப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கையின் சுகாதார துறைக்கு ஏற்புயைடதாகும் வகையில் விடய துறையினை திருத்தம் செய்தல், புதிய முறைகள், புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் புதிய கற்கை முறைகளின் ஊடாக சுதேச மருத்துவக் கல்வியினை மேம்படுத்தல் வேண்டும். தற்போது சுதேச மருத்துவ விஞ்ஞானத்தில் முக்கியத்துவம் மற்றும் நம்பிக்கைத் தன்மை தொடர்பாக மக்களிடத்தில் உளப்பாங்கு ரீதியாக அபிவிருத்தியை ஏற்படுத்தும் பொருட்டு அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள்மூலம் நடைமுறைப்படுத்தல் வேண்டும். இதற்காக கல்வி நிறுவனத்தில் விரிவுரையாளர்கள் ஆராய்ச்சிகளில் ஈடுபடுதல் மிகவும் முக்கியமான கடமைப் பொறுப்பாக அவதானிக்கப்பட்டது. அதன்படி தற்போது கல்லூரியில் 34 விரிவுரையாளர்கள் இணைக்கப்பட்டிருப்பினும் அவர்கள் 2017 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் ஆராய்சிகளின் பொருட்டு ஈடுபடவில்லை. | ஆராய்ச்சி குழு தாபிக்கப்பட்டு நிறுவனத்தின் ஆசிரியர்களை ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு ஊக்குவிக்கப்படும் | ஆராய்ச்சி நடவடிக்கைகளில் மேம்படுத்தல் மற்றும் அதனூடாக உள்நாட்டு மருத்துவ விஞ்ஞானமத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | 2017/2018 கற்கை ஆண்டில் 09 கலைமுதுமானி பாடநெறிகள், டிப்ளோமா பாடநெறிகள் மற்றும் சான்றிதழ் பாடநெறிகள் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருப்பினும், 04 பட்டநிலை பின்படிப்பு டிப்ளோமா பாடநெறிகளும், 02 விஞ்ஞானமுதுமானி பாடநெறிகளை மட்டும் நடாத்தப்பட்டிருந்தது. | பாடவிதானம் திருத்தங்களின் பின்னர் மாணவர்கள் ஆட்சேர்பபுச் செய்யப்படவில்லை. | திட்டமிடப்பட்டவாறு மாணவர்களை ஆட்சேரப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) 2013/2014 கற்கை ஆண்டின் பின்னர் ஆயர்வேத நிறுவனங்களின் முகாமைத்துவ மற்றும் நிருவாகம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு டிப்ளோமா பாடநெறி மற்றும் விஞ்ஞான முதுமானி பாடநெறிகளும் 2016/2017 கற்கை ஆண்டின் பின்னர் பஞ்சகர்ம விஞ்ஞான முதுமானி மற்றும் சத்திரசிகிச்சை பட்டநிலை பின்படிப்பு டிப்ளோமா பாடநெறிகளும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. | மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் நேர்முகப் பரீட்சை முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன், எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | தாமதமின்றி மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் வேண்டும் |

## 3.3 பயனற்ற மற்றும் குறைப்பயன்பாட்டு சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2017 ஆம் ஆண்டில் உடற்பயிற்சி நிலையத்தின் பொருட்டு ரூபா.1,118,750 பெறுமதியிலான உபகரணங்களை கொள்வனவு செய்திருப்பினும், அங்கு ஆலோசகர் ஒருவர் இல்லாத படியால் இந்த உபகரணங்கள் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு மாணவர்களுக்கு இயலாதிருந்தது. | எதிர்வருங் காலத்தில் இவ் வெற்றிடம் நிரப்பப்படவுள்ளது. | உபகரணங்களை உரிய நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு பயன்படுத்த வேண்டுமென்பதுடன், வெற்றிடமாகிய பதவியை நிரப்புவறத்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) கல்வி நிறுவனத்தில் 600 மாணவர்களுக்கு கற்கை வசதிகள் அளிக்கப்பட்டிருப்பினும், 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை 398 ஆகியதால் உபயோகம் 66% ஆகியது. சுதேச மருத்துவ விடயத்தை பிரபல்யப்படுத்தல் கல்வி நிறுவனத்தின் அடிப்படை நோக்கமாயினும், நாட்டுக்கு தேவையான சுதேச மருத்துவர்களை உருவாக்கும் பணி எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் இருக்காமை காரணமாக கல்வி நிறுவனத்தின் வளங்கள் குறைப் பயன்பாட்டில் இருந்தது. | கல்வி நிறுவனத்தில் கடந்த காலப் பகுதயில் மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக எதிர்வருங் காலத்தில் அதிகளவிலான எண்ணிக்கையினறுக்கு வளங்களை பயன்படுத்துவதற்கு வாய்ப்பு கிட்டும். | தற்போதுள்ள வளங்களை ஆகக்கூடிய மட்டத்தில் விளைவுத் திறனுடன் பயன்படுத்துவதற்கு முடியுமானவாறு அதிக எண்ணிக்கையினரை ஆட்சேர்பபுச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும் |

3.4 **ஒப்பந்த நிருவாகத்தின் குறைப்பாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 990 சதுர மீற்றர்களிலான 04 மாடிகளைக் கொண்ட நிருவாக கட்டிடம் நிருமாணிப்பதற்கு 79 மில்லியன் தொகை மதிப்பீடு 2011 ஆம் ஆண்டில் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டிருப்பினும், வேலைகளை ஆரம்பிக்கையில் அனுமதயின்றி அது 1,475 சதுர மீற்றர் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. | எதிர்வருங் காலத்தில் அனுமதி பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | அமைச்சரவை அனுமதி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா. 134.4 மில்லியன் தொகையிலான கற்கை கட்டிடத்தின் நிருமாணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பம் தொடக்கம் மந்தகதியில் நடைபெற்றதாக முன்னேற்ற மீளாய்வு கூட்ட அறிக்கை பிரகாரம் அறிய வந்துள்ளது. 2016 ஆம் அண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆந் திகதி தொடக்கம் 2018 ஆம் அண்டு மே மாதம் 31 ஆந் திகதி வரை அவ்வப்போது கட்டிடத்தின் நிருமாணிப்புகள் எதிரவருங் காலத்தில் அரை ஆண்டுகளைக் கொண்ட அண்மித்த காலப் பகுதிக்கு நீடிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தம் பொருட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட மொத்த தொகை ரூபா.13,332,311 ஆகியது. 2018 ஆம் ஆண்டு பெப்ருவரி 25 ஆந் திகதி தொடக்கம் ஒப்பந்தக்காரர் நிருமாணிப்பு நடவடிக்கைகளை நிறுத்திவிட்டு வர்த்தக நீதிமன்றத்திலும் வழக்கு தொடுத்திருந்தார் | செலவிடுவதற்கு நேரிடுகின்ற மேலதிக செலவினை மதிப்பீடு செய்து உரிய கம்பெனியிடமிருந்து அறவிடுவதற்கு சட்டரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் | மேலதிக செலவினை அறிவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

3.5 **மனித வளங்களின் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்விற்கான ஆண்டில் இரண்டு விரிவுரையாளர்கள் சப்த வருடாந்த லீவுகள் மற்றும் 09 விரிவுரையாளர்கள் கற்கை லீவு பெற்றுக்கொண்டிருந்த படியால் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கற்கை பணியாற்தொகுதியில் 15 வெற்றிடங்கள் நிலவிய படியால் அங்கீகரிக்கபடப்ட கற்கை பணியாற்தொகுதியில் 53 % அளவிலான பற்றாக்குறை நிலவியது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும் |

4. **கணக்கீட்டு நெறிமுறை மற்றும் நள்ளாளுகை**

**4.1 வருடாந்த செயற்றிட்டம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் அபிப்பிராயம்** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) கல்லூரி சமர்ப்பித்திருந்த செயற்றிட்டத்தின் முன்னேற்றம் பிரகாரம் 09 இலக்குகளின்கீழ் 90 அலுவல்களை நடைமுறைப்படுத்-துவதற்கு திட்டமிடப்பட்டிருப்பினும் அதில் 36 அலுவல்களை நிறைவேற்றியிருக்கவில்லை என்பதுடன், நிறைவேற்றிய 07 இல் முன்னேற்றம் 50% இற்கு குறைவாக இருந்தது. | பணிப்பாளர் நாயகத்தின் கேட்டு விலகுதல் மற்றும் மாணவர்கள் கற்கை நடவடிக்கைகளில் விலகியிருத்தல் காரணமாகியுள்ளது. | செயற்றிட்டத்தின் இலக்குகளை அடைந்துக்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) இலங்கையில் அல்லது வெளிநாட்டில் பல்கலைக்கழகம் அல்லது நிறுவனங்களுடன் கற்கைகள், பயிற்றுவிப்புகள் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் என்பவற்றுக்கு ஆசிரியர்களையும் மாணவர்களையும் பரிமாற்றிக்கொள்ளும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துல் கல்லூரியின் கடமைப் பொறுப்பாயினும், அதனை செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்டு நடைமுறைப்படுத்தவில்லை. | இவ்வாறான நிகழ்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவ-தற்கு வரவு செலவு ஒதுக்கீடுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் வருடாந்த செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்-பட்டுள்ளது | நோக்கங்களை அண்மித்தக்கொள்வ-தற்கு தேவையான செயற்றிட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |